Registerd as a Newspaper in Ceylon ★ விலை சதம் 10 ★

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (29-4-66) இதழ் 81

பராபவ சித்திரை 16 முஹர்ரம் பிறை 7 வெள்ளிக்கிழமை

பட்டு உடைகளை சாயம் போடுவதும் ரைக்கிளீன் செய்வதும்



சன்லைட் டையோஸ் அன் ரைக்கிளீனேர்ஸ்

(ராணித்தியேட்டருக்கு அருகாமை)

பெரியகடை. யாழ்ப்பாணம்.

போன்: 474. தந்தி: ரைக்கிளீன்

இலங்கையில்

### காந்தி நூற்றுண்டு கமிட்டி

கொழும்பு, ஏப் 28

இலங்கையில் நடைபெற்ற சர்வோதய சிரமதான இயக்க மகாநாடு 1969ம் ஆண்டு மகாத்மா காந்தியின் நூற்றுண்டு விழாக் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்யும் பொருட்டு ஆயத்தக்கமிட்டி ஒன்றை நிறுவயிருக்கிறது. இம்மகாநாட்டில் திரு. ஆர் ஆர் திவாகர் தலைமையில் இந்திய தூது கோஷ்டி கலந்துகொண்டது.

யாழ்ப்பாணத்தில

# மே தின ஊர்வலத்துக்குப் பொலிஸ தடை

## 5 மணி முதல் 10 மணிவரை கூட்டங்களுக்கு அனுமதி

யாழ்ப்பாணம், வெள்ளி

மேதினத்தின்போது எவ்வித அசம்பாவித சம்பவங்களும் ஏற்படாதவாறு கவனித்துக்கொள்ள யாழ்ப்பாணம் பொலிசார் ஏற்ற நடவடிக்கை மேற்கொண்டுள்ளனர்.

இதனை முன்னிட்டு மே தினத்தன்று ஊர்வலங்களுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது,

மே தினக் கூட்டங்கள் மாலை 5 மணி முதல் 10 மணிவரை நடைபெற அனுமதிக்கப்படும் என யாழ்ப்பாணம் உதவி பொலிஸ் சுப்பிரிண்டன் திரு. டி. மகேந்திரன் தெரிவித்துள்ளார்.

(ந. நி.)

ரசிகரஞ்சனசபா

## "கலைஞர்களை ஊக்குவிக்கும் பணியில் உழைக்கின்றோம்"

யாழ்ப்பாணம், வெள்ளி

"இசைக்கலையைச் சிறப்பாக அதற்கே சொந்தமான யாழ்ப்பாணத்திலும், பொதுவாக ஈழநாட்டிலும் வளர்க்க வேண்டுமென்ற பெருநோக்கோடு யாழ்ப்பாண ரசிகரஞ்சனசபா பதினைந்தாண்டுகளாகப் பணியாற்றிவருகின்றது."

யாழ்ப்பாண ரசிகரஞ்சன சபாவின் காரியதரிசி திரு. ச. தம்பையா தமது ஆண்டறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள சன்மார்க்க போதன ஆங்கில வித்தியாசாலை மண்டபத்தில் ஏழாம் நாளாக நேற்று மாலை கலைகலாச்சாரப்பகுதி அதிபர் திரு. லீல் குணசேகரா தலைமையில் நடைபெற்றது.

அந்த அறிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஆண்டுதோறும் இத்தகைய விழாக்களை எடுத்து சேய்நாட்டிலும், தாய்நாட்டிலும் பரவிக்கிடக்கும் பலரைக் கலந்துகொள்ளச் செய்தல்; மொழி, கலை, கலாச்சாரத் துறைகளில் புலமைபெற்ற பேரறிஞர்களைச் சிறப்பித்து ஊக்கப்படுத்துதல்; கலைஞர்களிடையே ஒற்றுமை, நல்லெண்ணங்களை வளர்த்து இசைக்குப் பயன்படுத்துத , வளர்ந்துவரும் இசை வித்துவான்களை ரசிகர்களுக்கு அறிமுகப்படுத்தி ஊக்குவித்தல்; ரசிகர்களின் ரசஞானத்தை விருத்தி செய்தல் ஆகிய பணிகளையே தம் முக்கிய கடமைகளாகக்கொண்டு உழைத்துவருவது யாழ்ப்பாண ரசிக சஞ்சனசபா சபை இசைக்கல்லூரியையும் நடத்திவருகிறது. இளைஞரிடையே அடங்கிக் கிடக்கும் இசை அறிவுக்கு ஏற்ற சந்தர்ப்பம் அளித்து அவர்களை இத்துறையில் பயிற்றிக் கலைஞர்களாக்கும் பெரும் பணியை இக் கல்லூரி நாலு வருடங்களாக ஆற்றிவருகிறது. இதனை நிறுவ அயராது உழைத்த பெரியார்கட்கும் அகநிறைவுடன் பயிற்றும் கலைஞர்கட்கும் தமிழ்உலகம்நன்றிசெலுத்த கடமைப்பட்டுள்ளது.

## கடும்காற்றுடன் பேய் மழை!

### 15 நிமிடநேரத்தில் கொழும்பு நகர் அல்லோலகல்லோலப்பட்டது

கொழும்பு, வியா.

இன்று காலை கொழும்பில் திடீரெனபெய்த கடும்மழை காரணமாகசுமார்பதினைந்து இருபது நிமிடங்கள்வரை கொழும்பு நகரின் பல பகுதிகள் பெருமளவில் பாதிக்கப்பட்டன. போக்கு வரத்துகள் பாதிக்கப்பட்டதுடன் தந்தி, டெலிபோன் தொடர்புகளும் சீர்குலைந்தன.

சுமார் இருபதுநிமிடங்கள் வரை 45 மைல் வேகத்தில் மோசமானகாற்றுடன் பேய் மழை பெய்ததாக அறிவிக்கப்பட்டுள்ளது.

திடீர் காற்று மழையினால் கொழும்பு நகரமே சில நிமிடநேரம் அல்லோலகல்லோலப்பட்டது.

வங்காள விரிகுடாவில் உருவான காற்று அமுக்கத்தினால் கொழும்பில் கடும் காற்றுடன் பேய்மழை பெய்ததாகவும் இவ் அமுக்கம் இப்பொழுது வடமேற்கு பக்கமாக நகர்ந்திருக்கிறதென்றும் ஆனால் கடும் மழையும் காற்றும் தொடர்ந்தும்திடீர் திடீரென இப்பகுதியில் ஏற்படலாமென்றும்எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளது.

பதினைந்து நிமிடநேரத்துக்குள்ளாக சோட்டை, கொள்ளுப்பிட்டி. பம்பலப்பிட்டி, கொம்பனித்தெரு உள்ளிட்டு பல பகுதிகளில் வெள்ளம் தேங்கிநின்றது.

'பெப்ரவரி சதி'

### முன்னாள் செனட்டர் விசாரிக்கப்பட்டார்

கொழும்பு, வியாழன்

லங்கா சமசமாஜக் கட்சியைச் சேர்ந்தமுன்னாள்செனட்டர் சந்திரா குணசேகரா இன்று காலை துப்பறியும்பொலிஸாரினால் விசாரணை செய்யப்பட்டாரெனத் தெரியவருகிறது.

தோல்வியுற்ற பெப்ரவரி சதிமுயற்சி சம்பந்தமாக இவர் விசாரணை செய்யப்பட்டதாக நம்பப்படுகிறது'

## கைகால்களைக் கட்டி நீந்த முடியுமா?

### நவரத்னசாமி கேட்கிறார்!

யாழ்ப்பாணம், வெள்ளி

'திரு. ஆனந்தன் திரு. ...சன் ஆகிய எவரேனும் கைகால்களைக் கட்டி, உடம்பையும் வரிந்து கட்டிக்கொண்டு கடலில் இரண்டு மைல்கள் நீந்திக் காட்டட்டும். இது முடியாதென்றால் பாக்கு நீரிணையிலுள்ள 'மயவு', களம்' என்ற நீரோட்டப் பகுதிகளை ஒரு போதும் நீந்தவே முடியாது'. இவ்வாறு நீச்சல் வீரர் திரு. நவரத்னசாமி நமது நிருபரிடம் கூறினார்.

மூன்று நீச்சல்வீரர்களும் ஒரே சமயம் ஒரே இடத்திலிருந்து மீண்டும் இந்நீச்சலை ஆரம்பிக்கும்படி செய்தால் திரு. மிகிர்சென்னே வெற்றி பெறக்கூடும் என்று திரு. மிகிர் சென்னுடன் சிறிது தூரம் நீந்தியதாகக் கூறும் முத்துக்குளிக்கும் தொழிலாளியொருவர் சொல்லியிருப்பது பற்றி திரு. நவரத்னசாமி குறிப்பிட்டு, இது சிரிப்புக்கிடமான விஷயம் என்றார். திரு. மிகிர்சென்னுக்கு 35 வயது ஆனந்தனின் வயது 22 அரசாங்க சேவையிலிருந்து இளைப்பாறியுள்ள எனக்கு இவர்கள் இருவர் வயதையும் கூட்டினால் வரும் 57 வயது. இதை நினைக்க சிரிப்பு வராதா என்று அவர் கேட்டார்.

## விமான விபத்தில் 40 பேர் பலி

லிமா, ஏப்ரல் 28

பெருவிலிருந்து 40 பேருடன் சென்ற ஒரு விமானம் மலையில் மோதியதன் [illegible] அனைவரும் மாண்டனர் என அறிவிக்கப்பட்டது.

## சுகாதார மந்திரிக்கு யாழ். மேயர் தந்தி

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலுள்ள குறைபாடுகளை உடனடியாக நிவர்த்திசெய்யும்படி யாழ். மேயர் திரு. ஏ. ரி. துரையப்பா சுகாதார மந்திரிக்குத் தந்தியொன்று அனுப்பியுள்ளார்.

அத்தந்தியில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

'யாழ்ப்பாண ஆஸ்பத்திரியிலுள்ள நோயாளர்கள் மருந்துவகைகள் இல்லாததால் மிகவும் கஷ்டப்படுகின்றனர். சிறிய சத்திரச் சிகிச்சைக்கும் பெரியசத்திர சிகிச்சைகளுக்கும் வேண்டிய அத்தியாவசியமான சில மருந்துகள் இங்கே இல்லை. ஆகையால் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### டானுங்கில் ஒரு கொலை

டானுங், ஏப். 28

டானுங் தேசியக்கட்சியின் பொதுக்காரியதரிசி இன்று சுட்டுக் கொல்லப்பட்டார். தென்வியட்னும் அரசாங்கத்துக்கெதிரான ஆர்ப்பாட்டங்களை இவர் கண்டித்தவர். 5 முறை இவர் சுடப்பட்டார்.

இன்றைய மாநகரசபை

## யாழ். ஆஸ்பத்திரி பற்றி அதிருப்தி தீர்மானம்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ். மாநகரசபை உதவி மேயர் திரு. கே. வி. தெய்வேந்திரன் பின்வரும் பிரேரணைக்கு முன்னறிவித்தல் கொடுத்துள்ளார். இப்பிரேரணையை இன்றைய மாநகர சபை மாதாந்தப் பொதுக் கூட்டத்தில் உதவி மேயர் பிரேரிப்பார்.

'யாழ்ப்பாணம் அரசினர் ஆஸ்பத்திரியில் உள் நோயாளர், வெளிநோயாளர் படும் கஷ்டத்தையிட்டு இச்சபை அதிருப்தியடைவதுடன் சத்திர சிகிச்சை முதலியன செய்வதற்கு வேண்டிய உபகரணங்களும் மருந்துவகைகளும் இல்லாமையால் உடனடியாக சுகாதார மந்திரியை இக்கஷ்டங்களை நீக்கி வைக்கும்படி இச்சபை கேட்டுக்கொள்கிறது.

## சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் மீண்டும் தமிழ்ப் பிரிவு

சிங்கப்பூர், ஏப். 28

சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் மீண்டும் தமிழ் பிரிவொன்றை ஆரம்பிப்பது பற்றி ஆலோசிக்கப்படுவதாக சிங்சப்பூர் கல்வி மந்திரி திரு. நுங் அறிவித்திருக்கிறார். சிங்கப்பூருக்கு விஜயம் செய்துள்ள தமிழ் அறிஞர்களைக் கௌரவிப்பதற்காக நடைபெற்ற வைபத்தில் அவர் இந்த அறிவித்தலை விடுத்தார்.

சிங்கப்பூர் பல்கலைக்கழகத்தில் தமிழ்ப் பிரிவு ஒன்று முன்னர் இருந்தது. அப்பிரிவு பின்னர் மலேஸிய பல்கலைக்கழகத்துக்கு மாற்றப்பட்டது. இப்பொழுது சிங்கப்பூர் மலேஸியா கூட்டிலிருந்து விலகிவிட்டதால் புதிதாக தமிழ்ப்பிரிவு ஒன்றை பல்கலைக்கழகத்தில் ஆரம்பிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்கின்றது.

சிங்கப்பூர் அரசாங்கம் அங்கீகரித்துள்ள நான்கு மொழிகளில் தமிழும் ஒன்றாகும். மலாய், ஆங்கிலம், சீனம் ஆகியவை மற்ற மூன்று மொழிகளாகும்.

### இசை விழா

#### இன்றையநிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் ரஸிக ரஞ்சன சபாவின் 15-வது ஆண்டு இசைவிழா எட்டாம் நாள் நிகழ்ச்சிகள்: 6-30 இரட்டையர் குழுவினர்— மெல்லிசை, 7-00 சிவப்பிரகாசம் வாசுகி(நடனநிகேதன் பாடசாலை மாணவி)—பூஜா நடனம், 7-20செல்வன் ஆனந்த இராசமாணிக்கம் டில்லி கலாநிகேதன் திரு. வேலானந்தன்— நடனம், 8-00 தலைமையுரை: திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை (தலைவர், தர்மகர்த்தாசபை, சங்கீதக் கல்லூரி), 8-15 'தெய்வ நீதி' என்னும் சரித்திர நாடகம்.

### உபதலைவர் தெரிவு

மாவிட்டபுரம், வியா.

சுன்னாகம் பட்டின சபையின் மாதாந்தக் கூட்டம் சபைத்தலைவர் திரு பி. நாகலிங்கம் தலைமையில் நடைபெற்றபொழுது ஆறும் வட்டார அங்கத்தவரான ஆறுமுகம் நல்லைநாயகம் சபையின் புதிய உபதலைவராக ஏகமனதாகத் தெரிவுசெய்யப்பட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### மணிவாக்கு

நகரமும் மோட்சமும் நம் மனத்தில் தான் உள்ளன. நம் மனம் இறைவனோடு இணைந்து விட்டால் நாம் மோட்சத்தில் இருப்போம். இறைவனை மறப்பின் நரகம்தான். நமது நல்ல எண்ணங்களைச் செயல்படுத்தாவிடில், நாம் காய்க்காத மரம்போலாவோம்.

— சுவாமி ராமதாஸ்


# ஈழநாடு

EELA NADU National Tamil Daily Post Box 49, JAFFNA
Telegrams: EELA NADU Jaffna. Phone: 9

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு சித்திரை மீ 16உ (29-4-66)


## அரசியல் அமைப்பில் வேற்றுமை

இலங்கை அரசியல் அமைப்புச் சட்டத்தைப் புதிதாகத் தயாரிக்க வேண்டுமென்ற முக்கிய விஷயத்தில் அரசாங்கத்துக்கும் எதிர்க்கட்சிக்கும் தீவிர கருத்து வேற்றுமை ஏற்பட்டுள்ளதாகத் தெரிகிறது. இருதரப்பினரும் இருவித பிரேரணைகளை பார்லிமெண்டில் கொண்டு வந்திருக்கின்றார்கள். இருதரப்பினரும் பொதுவான ஒரு பிரேரணையைத் தயாரிக்க வேண்டுமென்பது பற்றி நடந்த பேச்சுவார்த்தைகளும், முயற்சிகளும் பயனளிக்கவில்லை. இவ்வேற்றுமை காரணமாக இந்த முக்கியமான தேசியப் பணி மீண்டும் தடைப்பட்டுவிடுமோ என்று அஞ்சப்படுகிறது.

இப்பொழுது இருந்து வரும் சோல்பரி அரசியல் தயாரிக்கப்பட்டு இருபது வருடங்களுக்குமேலாகின்றன. இதில் பல குறைகள் இருப்பது அனுபவத்தில் தெரிய வந்துள்ளது. இந்தியா முதலிய நாடுகளில் அரசியல் நிர்ணய சபையே அரசியல் அமைப்புத் திட்டத்தைத் தயாரித்திருக்கையில், இலங்கை மக்களுக்கு அவ்வித சந்தர்ப்பம் அளிக்கப்படவில்லை. அதனால் 1956-ம் வருடம் முதல் ஒவ்வொரு வருடத்திலும் அரசியல் திட்ட சீர்திருத்தம் செய்யப்படுமென்று சிம்மாசனப் பிரசங்கத்தில் அறிவிக்கப்பட்டும் அது கைகூட முடியாமற் போயுள்ளது. அரசியல் கட்சிகளுக்குள் ஏற்பட்டுள்ள போட்டி மனப்பான்மையும் கருத்து வேற்றுமைகளுமே இதற்குக் காரணமாகும். இது மிகவும் துரதிருஷ்டமானதுடன், நாட்டின் முன்னேற்றத்துக்கும் பெருந் தீங்காகும்.

சுதந்திரக் குடியரசை ஏற்படுத்த வேண்டுமென்று இருதரப்பினரும் தங்கள் பிரேரணையில் கேட்டிருக்கின்றனர். அடிப்படை உரிமைகளுக்கு உத்தரவாதம் அளிக்க வேண்டுமென்று அரசாங்கப்பிரேரணை கூறுகையில், அவ்வித யோசனை எதையும் எதிர்க்கட்சியினர் கூறவில்லை. இதற்கு மாருக அரசியல் சட்டத்திலுள்ள '29-வது விதி போன்றவைகளை நீக்கி பார்லிமெண்டின் ஆதிபத்தியத்துக்குள்ள தடைகளை அகற்ற வேண்டும்' என்று எதிர்க்கட்சியினர் கேட்டுள்ளனர் பார்லிமெண்ட் ஆதிபத்தியத்தைவிட, தனி மனிதனின் அடிப்படை உரிமைகள் அதிகப் புனிதமானவை முக்கியமானவை. அதற்குப் பாதுகாப்பு எதுவும் செய்யாமல் விடுவதாயின், லங்கையில் மீண்டும் வகுப்புக் கலவரங்களும், மொழி, மதக் கிளர்ச்சிகளும் ஏற்பட்டு, சிறுபான்மைச் சமூகத்தினர் நசுக்கப்பட மாட்டார்களா?

அரசியல் சட்டத்திலுள்ள 29-வது பிரிவு, சிறுபான்மைசமூகங்களுக்குத் தேவையான பாதுகாப்பை அளிக்கவில்லைதான் காகிதச்சட்டங்களைவிட, நல்லெண்ணமும் அபிமானமும்தான் சிறுபான்மை சமூகங்களுக்கு உண்மையான பாதுகாப்பாகும். என்ருலும், அடிப்படை உரிமைகளை அரசியல் திட்டத்தில் சேர்க்க வேண்டியது மிகமிக அவசியம். இதைத்தாம் தயாரித்த அரசியல் திட்டத்தில் சேர்க்காமல் விட்டதின் பெருந்தவறை, சோல்பரி பிரபு பகிரங்கமாக சமீபத்தில் ஒப்புக்கொண்டுஅதற்காக வருத்தமும் தெரிவித்தார். இது கட்சி விஷயமல்ல. மனித உரிமையையும் தேசியப் பொதுநலனையும் பற்றிய விஷயமாதலால் இதைப் புதிய அரசியல் அமைப்புத்திட்டத்தில் சேர்ப்பது பற்றி இருதரப்பினரிடையிலும் கருத்து வேற்றுமை இருப்பதற்கில்லை. இந்திய அரசியல் திட்டத்திலும் இது சேர்க்கப்பட்டுள்ளது.

இப்பொழுது பார்லிமெண்ட் சபையிலே அரசாங்கக்கட்சிக்கு பெரும்பான்மைபலம் இருப்பதால், அக்கட்சிகொண்டு வந்துள்ள அரசியல் பிரேரணை சுலபமாக நிறைவேறிவிடக் கூடும். ஆனால் தேசிய முக்கியம் வாய்ந்த இவ்விஷயத்தில், எதிர்க்கட்சிகளின் ஒத்துழைப்பும் ஆதரவும் மிகவும் அவசியமாகும். அப்போதுதான் ஜனநாயகமும் வெற்றிகரமாக இயங்கமுடியும். இருதரப்பினரும் வீண் பிடிவாதம் காட்டாமல், தேசியப்பொது நன்மையைக்கருதி, பரஸ்பரம் பேசி, விட்டுக்கொடுத்து நாட்டுமக்களின் நன்மைக்கான அரசியல் திட்டத்தைத் தயாரிக்கவேண்டும். இவ்வித விஷயங்களில் கருத்துவேற்றுமைகள் அதிகம் இருப்பது சகஜம். ஆனால் தேசிய நன்மையைக்கருத்தில் வைத்துக் காரியம் செய்தால் இதில் ஒரு சமரசம் ஏற்படுவது சாத்தியமே. கருத்து வேற்றுமைகளை, கமிட்டி விவாதங்களில் தெரிவிக்கலாம். ஆனால் அரசியல் சீர்திருத்தமென்னும் முக்கிய விஷயத்துக்கு முட்டுக்கட்டை போடும் வகையில், தேசாபிமானிகள் நடக்கமுடியாது. இக்கூட்டுக்கமிட்டியை அமைக்கவும் இதில் கூடுமான ஒத்துழைப்பை அளிக்கவும் மக்கள் பிரதிநிதிகள் அனைவரும் முன்வருவரென்றே பொது மக்கள் நம்பிக்கையுடன் எதிர்பார்ப்பர்.

## 'கர்நாடக சங்கீதத்துக்கு ஆபத்து!'

யாழ்ப்பாணம், வெள்ளி

"கர்நாடக சங்கீத வித்வான்கள் புதிய, கற்பனை நிறைவுள்ள உருப்படிகளையும், புதிய இராகங்களையும், பாடப் பயில வேண்டும். கச்சேரி பாணி, பாடல் முறை, நிரவல், மனோதர்ம ஸ்வரம் முதலியவற்றில் புரட்சிகரமான மாறுதல் செய்ய வேண்டும். திரும்பத் திரும்பப் பழைய இராகங்களையும் ஒரேவிதமான உருப்படிகளையும் கச்சேரிகளில் வழங்கி வருவதால் பொதுமக்களுக்கு கர்நாடக சங்கீதத்தில் அலுப்புத்தட்டிவிட்டது. ஆகவே அவர்கள் லகுசங்கீதம், டப்பாசங்கீதம் முதலியவற்றை விரும்புகிருர்கள். சமுதாயம் வேகமாக மாறிக்கொண்டே இருக்கிறது. அதற்கேற்ப சங்கீதமும் மாற வேண்டும். இல்லாவிட்டால் இன்னும் சில வருடங்களில் அது மறைந்துபோகவும் கூடும்."

இவ்வாறு வைத்தீஸ்வர வித்தியாலயத்தில் நடைபெற்ற கர்நாடக சங்கீத ஆசிரியர்களின் புத்தூக்க வகுப்பில் திரு. வி. என். பாலசுப்பிரமணியம் ('வி. என். பி.') பேசும்போது எச்சரிக்கை செய்தார்.

இளைப்பாறிய உதவி வித்தியாதிபர் திரு. எஸ். யூ. சோமசேகரம் தமது தலையுரையில சங்கீத வித்வான்கள் போட்டி மனப்பான்மையை விடுத்து ஒற்றுமையாக இசையை வளர்க்க வேண்டும் என்றும், அரசாங்கம் இசைக்கலைஞர்களுக்கு பிரதேச கலாமன்றங்களின் மூலம் வேண்டிய உதவிசெய்யக் காத்திருக்கிறதென்றும் கூறினர்.

## ஆசியாவில் அமெரிக்கா

— செஸ்டர் பௌல்ஸ் —

வல்லரசுகளின் வெளிநாட்டுக் கொள்கையின் எதிரொலி இல்லாத நாடே இன்று உலகத்தில் இல்லை. வல்லரசுகளில் ஒன்று அமெரிக்கா, மற்றொன்று ரஷ்யா. ஆகவே, ஆசியாவில் அமெரிக்கா கடைப்பிடிக்க வேண்டுமென்று விரும்பும் வெளிநாட்டுக் கொள்கை என்னவென்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும்.

ஆசியாவில் தான் கடைப்பிடிக்க விரும்பும் வெளிநாட்டுக் கொள்கைக்குச் சில விஷயங்களை அமெரிக்கா அடிப்படையாகக் கொண்டிருக்கிறது அவைகளாவன:

### பொருளாதாரம்

1. ஆசியாவில் பெரும்பாலான நாடுகள் தங்களுக்குப் போதுமான உணவுப் பொருள்களை உற்பத்தி செய்து கொள்ளவில்லை.

2. வாழ்க்கைத்தரம் பொதுவாகக் குறைச்சல்.

3. புதிதாக உற்பத்தியாகும் செல்வங்கள் சமத்துவமற்ற விகிதாச்சாரத்தில் விநியோகமாகின்றன.

### அரசியல்

1. மேற்கு நாடுகள் ஏகாதிபத்தியக் கல்வி போய்விட்டது என்ற நினைப்பு வரும்போது சீனவின் எதேச்சாதிகார ஆக்கிரமிப்பு நினைவுக்கு வருகிறது. முதலில் கொரியாவிலும் பின்னர் இமயமலை எல்லையிலும் சீன போர் தொடுத்தது. இப்போது வியட்நாமில் போர் நடைபெறுகிறது.

2. பலாத்காரத்தின்மூலம் பொதுவுடைமையைப் பரப்பி விடலாம் என்று சீனர்கள் நம்புகிருர்கள்.

முதன் முதலாக, ஆசியாவில் அமெரிக்கா கடைப்பிடிக்க விரும்பும் கொள்கை என்னவென்பதற்கு கொரியாப் போர் ஒரு சோதனை கட்டமாக வந்தது. வட கொரியர்களும் சீனர்களும் தென் கொரியாவை ஆக்கிரமிக்க எண்ணினர்கள். இது நடந்தது 1950-ல் அப்போது 2-வது உலக யுத்தத்தின் காரணமாக ஜப்பான் அலுத்துப்போயிருந்தது. இந்தியா, இந்தோனேஷியா, பாகிஸ்தான் ஆகிய மூன்று நாடுகளும் நடுநிலைக் கொள்கையைக் கடைப்பிடித்தன. ஆகவே தென் கொரியாவை பாதுகாப்பதென்று ஐக்கிய நாடுகள் சபை தீர்மானம் நிறைவேற்றியபோது, அமெரிக்கா அதற்கு முழு ராணுவ உதவி அளித்தது

1958-ல் தைவானுக்கு ஆபத்து ஏற்பட்டபோது அமெரிக்கா அதன் உதவிக்குப்போயிற்று.

1962-ல் சீன தாக்கிய போது இந்தியா கோரிய உதவியை அமெரிக்கா அளித்தது.

அதுமட்டுமல்ல கொள் [illegible] கைக்கு தென் வியட்நாம் இப்போது சோதனைக்களமாக இருக்கிறது. தென் வியட்நாம் சுதந்திரமான நாடு. சீன நேரடியாகவோ மறைமுகமாகவோ உதவியளித்து அதன்மீது தாக்குதல் நடத்தி அதன் சுதந்திரத்தைப் பறிக்க முயலுவதை அமெரிக்கா அனுமதியாது. ஆனால் எது மிகவும் அத்தியாவசியமான வரம்போ அதற்குமேல் அமெரிக்கா நடவடிக்கை எடுத்துக் கொள்ளாது. சர்வதேச மேற்பார்வையின் கீழ் சுதந்திரமாக வட வியட்நாமிலும் தென் வியட்நாமிலும் தேர்தல் நடத்துவதை அமெரிக்கா ஒப்புக்கொள்ளும்.

அணுக்குண்டுகள் உற்பத்தியில் சீன உருப்படியான முன்னேற்றம் அடைந்துவிட்டாலும் கூட, பொதுவுடைமைச் சீனவின் ஆக்கிரமிப்பைச் சமாளிக்க எப்பொழுதெல்லாம் ஆசிய நாடுகள் உதவி கேட்கின்றனவோ அப்போதெல் அந்த உதவியை அமெரிக்கா அளிக்கும்.

ஆசியாவில் ஜனநாயகத்தைப் பாதுகாப்பதற்காக அமெரிக்கா பெருந்தியாகம் செய்துள்ளது. கடந்த 25 ஆண்டுகளில் ஆசியாவில் போரிட்டதால் அமெரிக்கர்களில் இறந்தவர்கள், காயமடைந்தவர்கள், காணமற்போனவர்கள் ஆகியோர் எண்ணிக்கை 4 இலட்சம். இதனல் அமெரிக்காவுக்கு ஏற்பட்ட செலவு 30,000 கோடி டாலர். ஜப்பான் பிலிப்பைன், கொரியா, தாய்வான் ஆகிய நாடுகளின் புனரமைப்பிற்காகச் செலவிட்ட தொகை 1000 கோடி டாலர். 1945க்குப் பின் ஆசியாவின் பொருளாதார வளர்ச்சிக்காகவும் அங்குள்ள கோடிக் கணக்கான மக்களின் உணவுத் தேவையைப் பூர்த்தி செய்யும் முறையிலும் கடனாகவும் மான்யமாகவும் வழங்கியது 1800 கோடி டாலர். இது தவிர ஆயிரக்கணக்கான தொழில் நுணுக்க வல்லுநர்களையும் அனுப்பியிருக்கிறது.

ஆசியாவில் பொதுவுடைமை அரசாங்கம் உள்ள நாடுகள் சீன, வடவியட்நாம், வடகொரியா ஆகிய மூன்றுமாம். ஆசியாவில் உள்ள மொத்த மக்கள் தொகையில் 63 சதவீதம் பேர் ஜனநாயக ஆட்சியின் கீழ் உள்ளவர்களாகும்.

மேற்கு நாடுகள் ஏகாதிபத்தியம் என்பது ஆசியாவிலிருந்து மறைந்து நீண்ட காலமாகிறது. கம்யூனிச அபாயத்தைத் தான் ஆசியர்கள் முக்கியமாகக் கருத வேண்டும். அவ்வாறு செய்யாமல் மேற்கு நாடுகள் ஏகாதிபத்தியத்தை ஒழித்துக் கட்டுவதாக பொதுவுடைமை யல்லாத ஆசிய நாடுகள் பேசுவது அமெரிக்கர்களில் பலருக்கு வருத்தத்தை அளிக்கிறது.

மொத்தத்தில் ஆசியாவின் எதிர்காலம் ஆசியர்களின் கையிலேயே இருக்கிறது.

## ஐயாறன் எழுதுகிறது

காலையில் காந்தி ராஜகோபால் வந்தார் அவரை உங்களுக்குத் தெரியும்தானே? திருகோணமலையைச் சேர்ந்தவர். இந்தியாவிலே மகாத்மா காந்தி தலைமையில் நடைபெற்ற உப்பு சத்தியாக்கிரகம், தனிப்பட்டவர் சத்தியாக்கிரகம் முதலிய இரு விடுதலைப்போர்களிலும் அவர் கலந்து இருமுறை சிறை சென்று ஈழத்துக்குப் பெருமையளித்தவர்.

அவருக்குச் சென்றமாதம் கோயம்புத்தூரிலிருந்து ஓர் அவசர அழைப்புக் கிடைத்தது. இந்திய விடுதலைப் போராட்டங்களிலே சிறை முதலிய தண்டனைகளை அனுபவித்த தியாகிகளுக்கு காங்கிரஸ் மகாசபையின் சார்பில் "தியாகி" என்ற ஒரு சான்றிதழ் அளிப்பதாயும் அதைப் பெற நேரில் வரும்படியும் கேட்டிருந்தனர். விமான வழி சற்றே திறந்ததால், அவர் நேரே கோயம்புத்தூர் சென்ருர்.

மார்ச்சு 20-ந்திகதி யன்று அவருக்கு காமராஜர் கையொப்பமிட்ட "காங்கிரஸ் அரசியல் தியாகிகள் சான்றிதழை" ஒரு விசேஷ கூட்டத்தில் அளித்துப் பாராட்டினர். சென்னை சிறையில் அவர் செக்கிழுத்ததையும், அலிப்புரம் சிறையிலே பாரதியார்விழாகூட்டத்துக்குத் தலைமை வகித்து நடத்துகையில் சிறைக்காவலர்களால் அடித்துக் காயம் பட்ட தியாகக்கதையையும் அக்கூட்டத்தில் தெரிவித்துப் போற்றினராம்.

ஃ ஃ ஃ

கோயம்புத்தூர் மத்திய சிறையிலே 'கப்பலோட்டிய தமிழன்' சிதம்பரனர் செக்கிழுத்தாரல்லவா? அந்தக் கருங்கல் செக்கை இப்போது அப்படியே காட்சிக்கு வைத்துள்ளனர். "அங்கு அதை முத்தமிட்டுக் கண்ணீர் விட்டேன். சிறைக்கைதிகள் அடங்கிய பெருங்கூட்டத்தில் பேசினேன். கள்ள நோட்டு அடித்து சிறைப்பட்டுள்ள கிருஷ்ணனை 'ஏ' வகுப்பில் ரேடியோமுதலிய வசதிகளுடன் ஓர் அறையில் வைத்துள்ளனர் சுகமாக இருக்கிருர்" என்றெல்லாம் தம் அனுபவங்களை உணர்ச்சியுடன் கூறினர்அவர்.

ஈழத்தைச் சேர்ந்த ஒரு தொண்டரும் பாரதநாட்டு விடுதலைக்காகச்செக்கிழுத்து தியாகம் செய்த கதையைக் கேட்க ஈழத்தில் யார்தான் பெருமை கொள்ளமாட்டார்? இந்தியா விடுதலை பெற்றதால்தான் இலங்கையும் விடுதலை பெற்றது. இந்திய விடுதலைப் போராட்டத்திலே ஈழத்திலிருந்து சென்று ஈடுபட்டு தியாகம் செய்த வீரரின் பெயர், இலங்கை சுதந்திர சரித்திரத்திலும் பொன்னே போல் பொறிக்கப்பட வேண்டும்.

(யாழ்ப்பாணத்திலிருந்தும் ஓர் மாணவ வீரர் அந்தப் போராட்டத்தில் ஈடுபட்டு அலிப்புரம் சிறையில் சில மாத காலம் தண்டனை அனுபவித்துவந்தார். அந்தக் கதை இங்கு பலருக்கும் தெரியாது. அதைப்பின்னர் ஒருசமயம்எழுதுகின்றேன்.)

ஃ ஃ ஃ

நாமக்கல் கவிஞருக்கு உடல் நலம் அவ்வளவு சரியில்லையாம். அவர் சென்னை

(6-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வியட்னுமில் வானச் சண்டையை நிறுத்து!

## அமெரிக்காவுக்கு செனட்டர் கென்னடி கோரிக்கை

### "விஸ்தரித்தால் சீனு படைகளை அனுப்பும்"

வாஷிங்டன், ஏப். 28

வியட்னுமில் அமெரிக்கா வானச் சண்டையை விஸ்தரிப்பதை முன்னுள் ஜனதிபதியின் சகோதரர் செனட்டர் ரெபர்ட் கென்னடி கண்டித்திருக்கிருர்.

அதேசமயம் வியட்னுமில் பகைவிமானங்களுக்குப் புகலிடம் இல்லை என சமீபத்தில் அமெரிக்காவெளியிட்ட அறிக்கையையும் அவர் கண்டித்திருக்கிருர்.

சீன விமானங்கள் சீனப் பகுதிகளுக்கு ளேயே துரத்திச் செல்லப்படலாம் என்றும், சீனத் தளங்கள் தாக்கப்படலாம் என்றும் அமெரிக்க அறிக்கையில் அர்த்தம் தெரிவிப்பதாக அவர் குற்றஞ்சாட்டினுர்.

இந்நிலையில் சீனு தனது ராணுவப் படைகளை வியட்னுமுக்குள் அனுப்பாது என்பதற்கு என்ன உத்தரவாதம் என்றும் அவர் கேட்டார்.

சமீபத்தில் வடவியட்னும் உயரே நடைபெற்ற வானச் சண்டைபற்றிக் குறிப்பிடும் போதே செனட்டர் கென்னடி மேற்கண்டவாறு கூறினுர்.

அமெரிக்க வெளிநாட்டுமந்திரி திரு. ரஸ்க் விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் தென்கிழக்காசியாவில் யுத்தத்தைப் பரப்புவதின் அபாயம் சீனுவுக்குத் தெரியும் என நம்புவதாயும் ஏனெனில் இவ்விஷயத்தில் அமெரிக்கா மிகவும் பாரதூரமாய் இருப்பதாயும் கூறினுர். நிற்க:

கடந்த இரண்டு ஆண்டுகளில் 4000க்கதிகமான தென்வியட்னும் அதிகாரிகளை வியட்காங்கியர் கடத்திச் சென்றும், கொலை செய்தும் இருப்பதாக அறிவிக்கப்பட்டது.

## கென்யா எம். பி.க்கள் மன்னிப்பு

நைரோபி, ஏப். 28

கென்யா ஆளும் கட்சியிலிருந்து விலகிய 14 எம். பி.க்கள் ஜனதிபதி கென்யாட்டாவுக்கு அனுப்பியுள்ளகடிதத்தில் தங்கள் ராஜினுமாவை வாபஸ் பெறுவதாயும், மீண்டும் கட்சியில்சேர விரும்புவதாயும் கூறியிருக்கிருர்கள். தங்கள் செய்கைக்கு அவர்கள் மன்னிப்புக் கோரியிருக்கிருர்கள்.

---

## ரொடீஷியா பற்றி வில்ஸன்

லண்டன், ஏப். 28

பிரிட்டனுக்கும் ரொடீஷியாவுக்குமிடையே பேச்சுவார்த்தைக்கு அடிப்படை எதுவும் இருக்கிறதா என்பதை ஆராயும் பொருட்டு இருநாடடு அதிகாரிகளுக்குமிடையே பூர்வாங்கபேச்சுக்கள் நடைபெறவிருப்பதாக பிரதமர் வில்ஸன் பார்லிமெண்டில் கூறினுர்.

---

## சீன நிபுணர்கள் விலக்கப்பட்டார்கள்

ஜாகர்த்தா, ஏப். 28

இந்தோனேஷியாவில் உள்ள சகல சீன தொழில்நுட்ப நிபுணர்களும் வேலைநீக்கம் செய்யப்பட்டிருக்கிருர்கள் என அறிவிக்கப்பட்டது.

---

## நிதி மந்திரி நிராகரித்தார்

புதுடில்லி, ஏப். 28

கிரிக்கெட் சுற்றுப் பிரயாணத்திற்கு 18000 பவுன் அன்னியச் செலாவணி ஒதுக்குமாறு விடுத்தகோரிக்கையை நிதிமந்திரி சுசீந்திர சௌத்ரி நிராகரித்து விட்டதாக, இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபைத் தலைவர் பரோடா மகாராஜா கூறினுர்.

---

## பாகிஸ்தான் ஊடுருவல்

புதுடில்லி, ஏப். 28

திரிபுரா பகுதியில் 30 பாகிஸ்தானியர் காடுகளுக்குள் புகுந்து மரங்களை வெட்ட ஆரம்பித்தனர் என்றும், இந்தியப் பொலிஸார் சுட்டவுடன் ஓடிவிட்டதாயும் அறிவிக்கப்பட்டது.

---

## 44 ஆக உயர்வு

புதுடில்லி, ஏப். 28

அமராவதி பருத்திவிதை தொழிற்சாலைத் தீவிபத்தில் இதுவரை மாண்டவர்கள் எண்ணிக்கை 44 ஆக உயர்ந்திருக்கிறது.

---

## பீகிங்கில் அல்பேனிய பிரதமர்

பீகிங், ஏப். 28

அல்பேனியப் பிரதம மந்திரி இன்று பீகிங்கு விஜயம் செய்கிருர்.

## பிரிட்டிஷ் சத்திரசிகிச்சை: முஸ்லிம் தலைவர்கள் கருத்து

கெய்ரோ, ஏப். 28

"பன்றி இறச்சியை உண்ணுவதிலிருந்து முஸ்லிம்கள் தடுக்கப்பட்டிருந்தபோதிலும், ஒருவரின் உயிரைக் காப்பாற்ற பன்றியின் அவயவங்களை உடம்புக்குள் புகுத்துவது அனுமதிக்கப்படுவதாகும்" என முஸ்லிம் மதத்தலைவர்கள் இருவர் தெரிவித்திருக்கிருர்கள்.

சமீபத்தில் பிரிட்டனில் நடைபெற்ற ஒரு சத்திரசிகிச்சை பற்றி இருமுஸ்லிம் மதத்தலைவர்களை கெய்ரோ பத்திரிகையான அல் அக்பர் பேட்டிகண்டபோது, அவர்கள் இக்கருத்தை வெளியிட்டனர்.

"மனித உயிரைக் காப்பாற்றுவதற்கு வேறு வழியில்லாமல்போனுல், இவ்வித மிருகங்களின் அவயவம் அதற்கு உதவி புரியுமானுல் இஸ்லாம் அதை அனுமதிக்கிறது" என எகிப்திய முப்தியான் ஷேக் அஹமத் ஹோர்டி கூறினுர்.

இஸ்லாமிய கூட்டத்தில் மற்றுமொரு நிபுணரும், மதத்தலைவருமான ஷேக் முகமத் எல் கஸாலி, வைத்தியக் காரணங்களுக்கு இவ்வித மிருகங்களின் அவயவங்களை உபயோகிப்பதை குர் ஆனின் கட்டளைகள் தடுக்கவில்லை என்றும் பன்றி இறைச்சியை உட்கொள்வது மட்டுமே தடுக்கப்பட்டிருக்கிறது என்றும் கூறினுர்.

இறக்கும் நிலையிலிருந்த 56 வயதான ஒரு பிரிட்டிஷ் காரருக்கு சமீபத்தில் பன்றியின் இருதயக் குழாய் பொருத்தப்பட்டது குறித்து இக்கேள்விகள் கேட்கப்பட்டன. (பி. டி. ஸி.)

---

## பூட்டானுக்கு உதவுவோம்

புதுடில்லி, ஏப். 28

பூட்டான் மக்களுக்கு மேலான வாழ்க்கை வசதியை அளிக்கும். முயற்சியில் இந்தியா உதவியளிக்கும் என்றும், அந்நாட்டின் அபிவிருத்தியைத் தமது நாடு பரிவுடன் நோக்கிறது என்றும் ஸ்ரீமதி இந்திரா காந்தி மன்னருக்கு நேற்றிரவு அளித்த விருந்து பசாரத்தில் பேசியபோது குறிப்பிட்டார்.

நேற்று டில்லி வந்த பூட்டான் மன்னரை பிரதம வெளிநாட்டு மந்திரி, பாதுகாப்பு மந்திரி ஆகியோர் வரவேற்றனர்.

---

## கோபாலன், நம்பூதிரி விடுதலை

திருவனந்தபுரம், ஏப். 28

சிறைவைக்கப் பட்டிருந்த திரு. ஏ. கே. கோபாலன், திரு.ஈ.எம்.எஸ். நம்பூதிரிபாத் உட்பட 50 இடதுசாரி கம்யூனிஸ்ட் தலைவர்கள் நேற்று விடுதலைசெய்யப்பட்டனர்.

## 1959-ம் ஆண்டிலேயே தாக்க திட்டமிட்டது சீனு?

புதுடில்லி, ஏப். 28

இந்தியா மீது 1962 அக்டோபரில் தாக்குதல் நடத்துவதற்குத் தயார் செய்து கொள்வதற்காக 1959-ம் ஆண்டிலேயே சீனத் துருப்புகள் தென் திபேத்தில் குவிக்கப்பட்டதாம். இந்தத் தகவலை நவசீன செய்திஸ்தாபனத்தின் நிருபர் ஒருவர் வெளியிட்டார். வட எல்லையில் சீன காவல் சாவடிகளை அவர் சமீபத்தில் பார்வையிட்டார்.

குச்சாவேராஜென் என்ற அந்த நிருபர் கூறியுள்ளதாவது: கடந்த 7 ஆண்டுகளாக சீன எல்லைப்புறப் படையொன்று பூடானுக்கு வடகிழக்கிலுள்ள இப்பகுதியில் நிறுவப்பட்டுள்ளது. அப்படை பல சண்டைகளைப் புரிந்தது. ரஸ்தாக்களை அமைத்தது. சமீபத்தில் அது தான் கட்டிய பாசறைக்குச் சென்றது.

உலகம் பூராவும் சண்டைகளை ஆரம்பிப்பதற்காக மாசேதுங் கொண்டுள்ள திட்டத்தை சீன சோல்ஜர் ஒருவரின் டயரி அம்பலமாக்குகிறது. தாக்லா பிரிட்ஜில் 1662-ம் வருஷம் முதல் உள்ள அந்த சோல்ஜருக்குப் படையில் உதவி போதகராகப் பதவி உயர்வு அளிக்கப்பட்டுள்ளதாம்.

அந்த சோல்ஜரின் டயரியில் கூறப்பட்டுள்ளதாவது: "உலகில் மூன்றில் இரண்டு பகுதி மக்களுக்கு விடுதலை கிடைக்கவில்லை. புரட்சி வீரர்களான நாம் ஆயுதங்களை வைப்பதற்கில்லை. அதற்கு புரட்சி தேவை".

## சீனத் தலைவர்களுடன் நாகர்கள் பேசினராம்

புதுடில்லி, ஏப். 28

நாகா கலகக்காரர்கள் எங்கிருந்து ஆயுதங்களை பெறுகிருர்கள் என்பது அரசாங்கத்துக்கு திட்டவட்டமாகத் தெரியாது என்றும், ஆனுல் பாகிஸ்தானிலிருந்து அவை வருகின்றன என்று தெளிவாக ஊகிக்கப்படுகிறது என்றும் லோகசபையில் பாதுகாப்பு மந்திரி சவான் கூறினுர்.

நாகா கலகக்காரர்களின் வன்முறைச் செயல்கள் அதிகரிப்பது பற்றி கேள்வி நேரத்தின் போது ஆத்திரத்துடன் குறிப்பிட்ட மெம்பர்களுக்கு அவர் பதிலளித்தார். பாகிஸ்தானிடமிருந்து நாகர்கள் ஆயுத உதவி பெறும் பிரச்னையை கடுமையாகப் பரிசீலிக்கவேண்டியிருக்கும் என்று மந்திரி கூறினுர்.

ராஜதந்திர துறை மூலம் பாகிஸ்தானை இது விஷயமாகக் கேட்ட போதெல்லாம் இல்லை என அது பதிலளித்து வந்ததாக ஸ்ரீ சவான் சொன்னுர். நமது பிரதேசத்தில் நாம் செயலாற்ற வேண்டியது பொறுப்பு. பாகிஸ்தானுக்கு நாகர்கள் செல்வதைத் தடுக்க வேண்டும் அல்லது அவர்கள் திரும்புவதைத் தடுக்க வேண்டும் அல்லது அவர்களைப் பிடித்துத் தண்டிக்க வேண்டும் என்ருர். நாகா கலகக்காரர்களுக்கு பாகிஸ்தான் உதவியளிப்பது பற்றி மதுலிமாயி, லோகியா, ஏ. பி. சர்மா உட்பட பல மெம்பர்கள் கவலை தெரிவித்து, அதை தடுக்க தக்க நடவடிக்கை எடுக்க வற்புறுத்தினர்.

நாகா கோஷ்டிகள் பாகிஸ்தானுக்குச் சென்று, அங்கு ஆயுத பயிற்சி பெற்ற பிறகு இந்தியாவுக்குத் திரும்பியதாக மந்திரி கூறினுர். அவர்களைத் தடுத்து நிறுத்த முயற்சித்தோம் சில சமயங்களில் வெற்றி பெறவில்லை என்ருர்.

கிழக்கு பாகிஸ்தானில் சீனத் தலைவர்களுடன் நாகா தூது கோஷ்டி பேசியதாக ஹெம்பருவா கூறிய "தகவலை" லோகசபையில்வெளி விவகார மந்திரி சுவர்ண் சிங் ஊர்ஜிதம் செய்ய முடியவில்லை.

## பெரிய மின்சக்திகளை இங்கு உருவாக்கும் வசதி உண்டு

சுழிபுரம், வியாழன்

'உலகநாடுகள் ஒவ்வொன்றும் தமக்கென எரிபொருள்களை நிறைய வைத்திருக்கின்றன. ஆனுல் இலங்கையில் நாம் எரி பொருளை வைத்திருக்காது தேவையற்றமுறையில் பிறர்கையை எதிர்பார்ப்பவர்களாக வாழுகின்ருேம். இலங்கையில் தண்ணீர் நிறைய உண்டு. இத்தண்ணீரைக் கொண்டு பல பெரிய மின் சக்திகளை உருவாக்கலாம்' என சுழிபுரம் கிழக்கு வீரபத்திரர் சனசமூக நிலையத்தின் 20-ம் ஆண்டு நிறைவு விழாவில் அரசினர் விக்ரோறியாக் கல்லூரி உதவி அதிபர் என். சிவஞானம் பேசுகையில் குறிப்பிட்டார்.

சுழிபுரம் கிராம சபைத் தலைவர் திரு. சு. கந்தசுவாமி பேசுகையில், கிராமங்களின் விளக்காக இன்றுதிகழ்பவை சனசமூக நிலையங்கள். இந் நிலையங்கள் எவ்வளவு பிரகாசமாக எரிகின்றனவோ, அங்கே அதிக நல்லவேலைகள் நடைபெறுகின்றன என்பது தான் அர்த்தமாகும். இந்நிலையங்கள் அறிவுக் களஞ்சியமாகவும் கிராமத்தின் புகழை நிலைநாட்டும் மன்றமாகவும் அமைகின்றன என்ருர்.

பண்டிதை நா. பாக்கியம், புலவர், கா. வேல்முருகன் ஆகியோர் உட்படப்பலர் பேசினர். பின்னர் நிலைய உறுப்பினர்களின் 'கடமை' 'சந்தேகம்' என்ற இருநாடகங்கள் இடம்பெற்றன.

---

## சினிமாப் பாட்டிக்கு அனுமதி மறுப்பு

கொழும்பு, வியா.

இந்திய திரைப்பட உற்பத்தியாளர் சங்கமும், பிலிம் தயாரிப்பாளர் 'கில்டும்' ஜூன் முதலாம் தேதியிலிருந்து இலங்கை வானெலியில் சினிமாப்பாட்டுக்களை ஒலிபரப்ப அனுமதி கொடுப்பதில்லையென்று முடிவு செய்துள்ளன.

சினிமாப்பாட்டுக்களை ஒலிபரப்புவதற்கு இந்திய திரைப்பட உற்பத்தியாளருக்கு 'ராயல்டி' பணம் கொடுப்பதில்லையென்று இலங்கை செய்த முடிவினைத் தொடர்ந்தே இந்திய சினிமா உற்பத்தியாளர் சங்கம் இந்த முடிவைச் செய்திருப்பதாகத் தெரியவருகிறது.

---

## பால் சபையினர் விஜயம்

சுழிபுரம், வியாழன்

இலங்கை பால் சபை உத்தியோகஸ்தர்கள் வலிகாமம் மேற்கு ஐக்கிய பாற்பண்ணை சங்க விபரங்களை வந்து ஆராய்ந்து புள்ளி விபரங்களுடன் எடுத்துச் சென்றுள்ளனர்.

## ஐரோப்பிய உச்சி மகாநாடு

மாஸ்கோ, ஏப்ரல் 28

இத்தாலியத் தலைவர்களுடனும், பாப்பரசருடனும் பேச்சு நடத்திவிட்டு ரஷ்ய வெளிநாட்டு மந்திரி குரோமிகோ மாஸ்கோ திரும்பினுர்.

எல்லா ஐரோப்பிய நாடுகளையும் கொண்ட உச்சி மகாநாடு ஒன்று, ஐரோப்பியப் பாதுகாப்பு சம்பந்தமாக நடத்தப்பட வேண்டும் என அவர் நிருபர்களுக்களித்த பேட்டியில் கூறினுர்.

கொள்கை, லட்சிய வேறுபாடு ஒருபுறமிருப்பினும், சமாதானத்தை முன்னிட்டு அனைவரும் ஒன்றுபட வேண்டும் என்றும் அவர் கூறினுர்.

வத்திக்கானில் திரு. குரோமிக்கோ பாப்பரசருடன் 40 நிமிடநேரம் பேச்சு நடத்தினுர் என்பது குறிப்பிடத்தக்கது.

சில ஆண்டுகளுக்கு முன் ஐரோப்பிய உயர் அந்தஸ்து மகாநாடு ஒன்றை போலந்தும் கோரியிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சினிமா விமர்சனம்

# சம்பூர்ண ராமாயணம்

ஹிந்தியிலிருந்து ஒரு தமிழ்ப்படம்

ராமாயணங்களில் இது ஒரு வகை! கதை முடிந்து விடுகிறது என்று எண்ணும் கட்டத்தில் புதியதொரு கதை மீண்டும் ஆரம்பமாகிறது! ராமாயண 'ஒரிஜின'லை எழுதிய 'வால்மீகி'யே தோன்றும் மீண்டும் ஆரம்பமாகும் புதிய கதையை இயக்குகிறார். 'வால்மீகி' வந்தபடியால் தமிழில் மொழிபெயர்த்த கம்பரும் வருவாரோ என்றசந்தேகம் எழுகிறது. படத்தை எடுத்தவர்கள் புத்திசாலித்தனமாக அந்த 'அப்பாவி'யை விட்டுவைத்து விட்டார்கள்!

படித்த ராமாயண கதைதான்! ஆனால் அப்பன், மகன் பேரப்பிள்ளைகள் அளவுக்கு வளர்த்திருக்கிறார்கள். பதினான்கு வருடம் வனவாசம் செய்துவிட்டு சீதாதேவியாருடன் அயோத்தி சென்று, மன்னன் மகுடத்தை அணிந்துகொண்ட பிறகும் இராமருக்கு புதிய சோதனை ஒன்று ஏற்படுகிறது. சீதாதேவி அம்மையாரை காட்டுக்கு அனுப்பி வைக்கிறா. அவள் அன்புக்குரிய கணவர் இராமர். வால்மீகியிடம் தஞ்சம் அடைந்த சீதாதேவி இரட்டைப்பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறாள். இப்படியே கதை போய், 'சுப'மாக முடிகிறது ஹிந்தியிலிருந்து 'டப்' செய்ததால் 'தமிழ்க் கொலைகள்' நடைபெறுகிறதென்று சொல்லித்தான் தெரிய வேண்டியதில்லை; வர்ணத்தில் படத்தைப் பிடித்திருப்பதால் கண்ணுக்குக்குளிர்ச்சியாக இருக்கிறது. தந்திர மாந்திரக்காட்சிகளை எடுத்தவர்கள் சற்று நுணுக்கமாக எடுத்திருக்கக்கூடாதா? பார்ப்பவர்களுக்கு எல்லாம் வெறும் கேலிக்கூத்தாகத் தோன்றும்படி எடுத்துவிட்டார்கள்.

இராமராக நடித்த மகிபாலின் உருவத்தில் சாந்தமும், அமைதியும் இருப்பதால் அந்தப் பாத்திரம் பொருத்தமாக அமைந்திருக்கிறது. அலிதா குகா சீதையாகத் தோன்றினார்! பரவாயில்லை. கெலனின் நடனம் பிரமாதம் என்று சொல்வதற்கில்லை! மற்றும் ராஜ்குமார், சுலோசனா, லலிதா நடித்திருக்கிறார்கள்.

பாபுபாய்மிஸ்திரிடைரக்ட் செய்திருக்கிறார். குறைகள் இருந்தாலும், நிறைகள் மூடி மறைத்துவிடுகின்றன.

பாட்டுக்கள் நினைவிலில்லை! மொத்தத்தில் - வந்துபோன ராமாயண வரிசையில் இது ஒரு புதுத்தினுசு!

இப்படம் யாழ்ப்பாணம் வின்ஸர் தியேட்டரில் ஓடிக்கொண்டிருக்கிறது. —பாமா

## மதுவை ஒழிக்கவேண்டும்
### சாமஜம் முடிவு

துணுக்காய், வியாழன் "மக்கள் சுபிட்சமாகவாழ்வதற்கு மது ஒழிப்பு அவசியமாகும். அதற்கு வேண்டிய சகல முயற்சிகளையும் சமாஜம் செய்யவேண்டும்" என்று துணுக்காய் அரசினர் பாடசாலையில் நடைபெற்ற துணுக்காய்ப் பகுதிக் கிராம முன்னேற்றச் சங்கங்களின் சமாஜக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

இயக்கம் வெற்றியடையச் செய்யவேண்டிய செயல் திட்டங்களை வகுப்பதற்கு பின்வரும் மூவர் கொண்ட உபகுழு அமைக்கப்பட்டது.

உபகுழு: திரு. க. கிருஷ்ண பிள்ளை, திரு. வ. வேலுப் பிள்ளை, திரு. செ. மயில்வாகனம்.

## மகாகும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், வெள்ளி யாழ்ப்பாணம் ஆனைப்பந்தி ஸ்ரீ குருநாதசுவாமி ஆலயபுனராவர்த்தன அஷ்டபந்தன மகா கும்பாபிஷேகம் மே 2-ம் திகதி காலை நடைபெறும். இரவு உற்சவம் நடம்பெறும். குருநாதசுவாமிகள் அலங்கரிக்கப்பட்ட முத்துச்சப்பரத்தில் வீதி வலம் வருவார்.

## நேபாளம் அழைப்பு

புதுடில்லி, ஏப். 28 நேபாளம் வருமாறு ஸ்ரீமதி இந்திரா காந்தி அழைக்கப்பட்டிருக்கிறார்.

## இ. தொ. கழக மே தினம்

தலவாக்கொல்லை, வியா இலங்கை தொழிலாளர் கழகத்தினர் மேதினத்தை தலவாக்கொல்லை ஜெயந்தி மாவத்தையில் கொண்டாடவிருக்கிறார்கள். இ. தொ. கழக தலைவர் செனட்டர் சு. நடராசா தலைமையில் நடைபெறவிருக்கும் இந்த மேதின விழாவில் தமிழரசுக் கட்சித் தலைவர் திரு: எஸ். ஜே. வி. செல்வநாயகம் உட்பட வேறு பலரும் உரை நிகழ்த்தவிருக்கின்றனர்.

மலையகத் தொழிலாளர் சம்பந்தப்பட்ட பல பிரச்னைகள் பற்றி இந்த விழாவில் தீர்மானங்கள் கொண்டு வரப் படுமெனஅறிவிக்கப்பட்டுள்ளது.

மலையகக் கடிதம்

# இலங்கை வானொலி விவசாய பகுதியில் பாரபட்சமா?

— நமது நிருபர் —

பல மாதங்களுக்குப் பின் ஆரம்பிக்கப்பட்ட தலைமன்னார்—இராமேஸ்வரம் கப்பல்சேவையில் தினம் முன்னூறுக்கு அதிகமான பிரயாணிகள் பிரயாணம்செய்கிறார்கள் ஆனால் இவ்வளவு பிரயாணிகளில் 200-க்கு அதிகமானவர்கள் தேயிலைத் தோட்டத் தொழிலாளர்களாவர்.

இவர்கள் அனைவரும் இலங்கையைப் பூரணமாக விட்டு இந்தியா செல்பவர்களாகவே இருக்கிறார்கள். ஆனால் இவர்கள் உபயோகித்த சாமான்கள் அனைத்தையும் கொண்டு போக அனுமதி மறுக்கப்படுகிறார்கள். கூடிய அளவு 144 றாத்தல் சாமானை கொண்டுபோகமுடியும் என்றால், ஒரு குடும்பத்தில் ஐந்து முதல் பத்துப்பேர்கள் வரை இருக்கும் குடும்பங்கள் என்ன செய்யமுடியும்? அதோடு சாமான்களையும் "லக்கேச்" எடுத்துக் கொள்ள மறுக்கிறார்கள். இதனால் கொண்டுபோகும் அவ்வளவு சாமான்களையும் தாங்களே புகையிரதத்தில் பிரயாணம் செய்யும்போது தங்களோடேயே வைத்துக் கொள்ள வேண்டுமெனவும் புகையிரத நிலையத்தார் கூறுகிறார்கள். இதன்காரணமாக பல சாமான்களும் பிரயாண தஸ்தாவேஜுகளும் காணமல்போவதற்கு ஏதுவாயிருக்கின்றன. இப்படியான சம்சவங்கள் பல அண்மையில் நடைபெற்றுள்ளன.

இதனால் ஏற்படும் சிரமங்களை போக்க அரசாங்கமும் தோட்டத்தொழிலாளர்களின் பிரதிநிதிகளும் ஆவனசெய்யவேண்டும்.

### வானொலி விவசாயம்

இலங்கை வானொலி விவசாயப்பகுதியில் வடக்கு, கிழக்கு போன்ற மாகாணங்களுக்கு மட்டுமே வேண்டிய ஆலோசனைகளும், பேட்டிகளும், அங்குள்ளவர்கள் பங்குபற்றக்கூடிய வாறு போட்டிகளும் நடாத்தப்படுகின்றன. மலையக சிதோஷ்ண நிலைக்கேற்றவாறு, கறிகாய் பயிரிடுவதற்கோ, வேறு எந்த வகையான ஆலோசனைகளோ கிடைப்பது இல்லை என்றும் வானொலி விவசாயப்பகுதியினர் மலையக விஷயத்தில் பாரபட்சம் காட்டுகிறார்களாவென்றும் இளைஞர்சங்கங்கள் குறை கூறுகின்றன.

ஆயிரம் மாணவர்களுக்கு மேல் வதியும் கொட்டகலைப் பகுதியில் அவர்களுக்கென ஒரு பாடசாலை இல்லாதது பலவருடங்களாக பெரும் குறையாகவே இருந்துவருகிறது. இம் மாணவர்கள் தற்போது பல மைல்களுக்கப்பாலுள்ள தலாவக்கலை, அட்டன், நாவலப்பிட்டி கண்டி போன்ற இடங்களுக்குச் சென்று கல்வி கற்று வருகிறார்கள். இக் குறையை நீக்கும்படி இப்பகுதி மக்கள் இ. தோ. காங்கிரஸை கேட்டுக்கொண்ட தற்கிணங்க நியமன எம், பி. திரு. வி. அண்ணாமலை இதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார் எனத் தெரிகிறது.

## கலைமன்றக் கூட்டம்

பருத்தித்துறை, வியா. ஞானசம்பந்தர் கலைமன்றத்தின் புதுவருடக்கூட்டம் நடைபெற்ற போது பின் வருவோர் புதுவருட உத்தியோகத்தர்களாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

போஷகர்: திருமதி தி. புவனேஸ்வரி, தலைவர்: திரு. மூ. கணேசன், உபதலைவர்: திரு. க. இராஜசிங்கம், இணைக்காரியதரிசிகள்: செல்வி: க. புவனராணி, செல்வன் க. புவிரஞ்சன், தனாதிகாரி: செல்வ மூ யோகரஞ்சிதம், கணக்காளர்: செல்வன் கு மகேந்திரன், நிலைய அதிகாரி: செல்வி கு. சந்திரவதனா. ஐந்துபேர் கொண்ட நிர்வாகக்குழு ஒன்றும் தெரிவு செய்யப்பட்டது.


நல்ல காலம் வருகுது!
நல்ல காலம் வருகுது!




உங்கள் வீடு தேடிவரும்
சன்லைட் மங்கையிடம்
10/- ரூபாய்
பரிசு
பெறுங்கள்!

இலகுவாக நீங்கள் 10/- ரூபாய் பரிசு பெற இதோ ஒரு சந்தர்ப்பம்!

மேலே படத்தில் காணப்படுபவர் போன்ற ஒரு சன்லைட் மங்கை, ஏப்ரல் 28ம் தேதிக்கும் 30ம் தேதிக்கும் இடையில் நூற்றுக்கணக்கான வீடுகளுக்கு விஜயம் செய்வார். அவர் விஜயம் செய்யும் வீடு தோறும், உங்கள் தகுதியை ஆராய்ந்து பத்து ரூபாய் வீதம் பரிசுகளை வழங்குவார்.

பத்து ரூபாய் பரிசுக்குத் தகுதி பெற நீங்கள் செய்ய வேண்டியதெல்லாம் இவ்வளவுதான்:

உங்கள் வீட்டில் இரண்டு கட்டி சன்லைட் வைத்திருங்கள். ஒன்று பாவனையிலும் ஒன்று புதிதாகவும் இருக்க வேண்டும். இரண்டுகட்டிகளையும் சன்லைட் மங்கையிடம் காட்டுங்கள். "நீங்கள் ஏன் சன்லைட் உபயோகிக்கிறீர்கள்?" என்று அவர் கேட்பார்.

"சன்லைட் தருவது மேலும் பிரகாச சலவை; அத்துடன் சன்லைட்டினால் ஒரு உடையைச் சலவை செய்யும் செலவு, ஒரு சதத்திலும் குறைவு" என்று சரியாயாகப் பதில் கூறுங்கள். இந்தச்சரியான விடையைக் கூறினால் உடனே அவர் உங்களுக்கு 10/- ரூபாய் பரிசு கொடுப்பார்

இந்தப் பரிசுத் திட்டம் யாழ்ப்பாணக் குடாநாட்டில் மட்டும் செல்லுபடியாகும்.

உங்கள் சலவை வேலைகள் அனைத்தையும், வீட்டில் சன்லைட்டினால் செய்து, சுத்தமான பிரகாசமான ஆடைகளை அணியுங்கள். கொடுக்கும் பணத்துக்குத் தகுந்த சிறந்த பெறுமதி தருவது சன்லைட்.

சன்லைட் மேலும்
பிரகாசமாகச் சலவை
செய்கிறது-
வேறெந்த சோப்பும்
நிகர் நிற்க முடியாத
பிரகாசம்.




JWT/S/4x56 (P)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளம்பரம்

## தேவை

**வலிகாமம் மேற்கு ஐக்கிய பால் பண்ணைச் சங்கம்**

பால் பரிசோதனை செய்வதற்கு ஒரு தேர்ச்சி பெறப்பட்ட ஒரு பரிசோதகர் (Analysist) தேவை.

தராதரம்:

(1) வயது 25க்கும் 40க்கும் உட்பட்டவராகவும்.

(2) கல்விப் பொதுத் தராதரப் பத்திரத்தில் பிரதானமாக இரசாயனப் பாடத்தில் (Chemistary) சித்தியடைந்தவராகவும் இருக்கவேண்டும்.

சம்பள விகிதம்:

சகல வாழ்க்கைப்படியும் உட்பட 125—255
5X6 & 10X10

விண்ணப்ப முடிவுத் திகதி 15-5-66.

க. நாகலிங்கம்,
கௌரவ காரியதரிசி.
வழக்கம்பரை
சுழிபுரம். 171




## கொழும்பு
### வெள்ளி 29-4-66

(செய்திகள்: காலை 7-00, பகல் 12-45, மாலை 6-00, இரவு 9-00)

**844 மீற்றர் & 61 மீற்றர்**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-50 சைவநற்சிந்தனை, 6-55 இஸ்லாமிய நற்சிந்தனை, 7-15 துதிப்பாடல்கள், 7-30 குரல்வகை, 7-45 தோத்திரப்பாடல்கள், 8-15 இஸ்லாமியகீதங்கள்.

**844 மீற்றர் & 49 மீற்றர்**

பகல் 12-00 சித்திரகானம், 1-00 கதம்பஇசை,

**844 மீற்றர் & 61 மீற்றர்**

மாலை 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-15 படத்திவிருந்து, 6-15 கிராம சஞ்சிகை, 6-15 கதாப்பிரசங்கங்கள், 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி, 9-15 பேச்சு, 9-30 தேர்ந்த இசை 10-00 நேயர்விருப்பம்.

## இசையாசிரியர் புத்தூக்க வகுப்பு
### புதிய நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், வியா.

வைத்தீஸ்வர வித்தியாலய மண்டபத்தில் 'இசையாசிரியர் புத்தூக்க வகுப்பு' வித்தியாதரிசினி திருமதி வேலாயுதம்பிள்ளை தலைமையில் நடைபெற்றது. கலந்துரையாடல் நிகழ்ச்சியில் இசையாசிரியர்களான சங்க அங்கத்தினர்கள் தெரிவுசெய்யப்பட்டனர்.

போஷகர்கள்: வடபகுதி உதவி வித்தியாதிபதி, சங்கீதவித்தியாதரிசினி திருமதி வேலாயுதபிள்ளை, தலைவர்: சங்கீதபூஷணம் திரு. கு. வேலாயுதபிள்ளை, உபதலைவர்: திரு. சி. விநாசித்தம்பி கௌரவ காரியதரிசி: திரு. செ. பாலசுப்பிரமணியம், உப-காரியதரிசி: திரு. பொ. இளையதம்பி, கௌரவ தனதிகாரி: திரு. வ. கோ. குமாரசாமி, கணக்குப்பரிசோதகர்: கே. தாமோதரம்பிள்ளை. நிர்வாகசபை அங்கத்தினர்களாக ஒன்பதுபேர் தெரிவுசெய்யப்பட்டனர்.

கிரிக்கெட்

## வெற்றி தோல்வியில்லை

கோண்டாவில், வியா.

கொக்குவில் இந்துக்கல்லூரி கிரிக்கெட் கோஷ்டிக்கும் கோண்டாவில் ரேயல் கோஷ்டிக்குமிடையில் கொக்குவில் இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற கிரிக்கெட் போட்டி வெற்றி தோல்வியின்றி முடிவடைந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய கொக்குவில் இந்துக்கல்லூரி எல்லா விக்கெட்டுகளையும் இழந்து 106 ஓட்டங்களைப் பெற்றனர். திரு குமாரநாதன் 29 ஓட்டங்களையும் சிவராஜா 15 ஓட்டங்களையும் நாகராஜா 18 ஓட்டங்களையும் பெற்றனர். கோண்டாவில் ரேயல் கோஷ்டியைச் சேர்ந்த சபாலிங்கம் 24 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 5 விக்கெட்டுகளையும் கந்தையா 33 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 4 விக்கெட்டுகளையும் சிறீதரன் 25 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு 1 விக்கெட்டையும் எடுத்தனர். தர்மேந்திரா 14 ஓட்டங்கள் நஷ்டத்திற்கு ஒரு விக்கெட்டையும் எடுக்கவில்லை. அடுத்து துடுப்பெடுத்தாடி கோண்டாவில் ரேயல் கோஷ்டி எல்லா விக்கெட்டுக்களையும் இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றனர். இதில் நித்தியானந்தன் 6 ஓட்டங்களையும் தர்மேந்திரா 11 ஓட்டங்களையும் சபாலிங்கம் 7 ஓட்டங்களையும் சிறீதரன் 6 ஓட்டங்களையும் பெற்றனர்.

விளையாட்டு முடிவில் நேரம் போதாததால் போட்டி வெற்றிதோல்வியின்றி முடிவடைந்தது.

## நயினாதீவு வெற்றி

யாழ்ப்பாணம், வெள்ளி

நயினாதீவு மத்திய சனசமூக நிலையக் கிரிக்கட் கோஷ்டிக்கும் அனலைதீவு கிரிக்கெட் கோஷ்டிக்குமிடையே நயினை மகா வித்தியாலய மைதானத்தில் நடைபெற்ற வருடாந்த சினேகபூர்வமான கிரிக்கெட் போட்டியில் நயினாதீவு மத்திய சனசமூக நிலையக் கோஷ்டி வெற்றிபெற்றது.

கிரிக்கெட்

## யாழ்ப்பாணம் கொழும்பு மோதல்

யாழ்ப்பாணம், வெள்ளி

யாழ்ப்பாணம் பாடசாலைகள் தெரிவு கோஷ்டிக்கும் கொழும்பு தெற்கு பாடசாலைகள் தெரிவு கோஷ்டிக்குமிடையேயான கிரிக்கெட் போட்டி இன்று நண்பகல் 12 மணிக்கு மத்திய கல்லூரி விளையாட்டரங்கில் ஆரம்பமாகின்றது. நாளை தொடர்ந்து நடைபெறும்.

## அத்திவாரக் கல் நாட்டுவிழா

அச்சுவேலி, வியா,

கோப்பாய் ஐக்கிய பண்டசாலை கட்டிட அத்திவாரக்கல் நாட்டுவிழா மே 2-ல் நடைபெறும். கோப்பாய் வடக்கு நாற்சந்திக்கு அண்மையிலுள்ள பண்டசாலை காணியில் இந்த கல் நாட்டு வைபவம் இடம்பெறும். யாழ் மேற்கு கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. கே. எஸ். பொன்னுத்துரை அத்திவாரக் கல்லை நாட்டி வைப்பார்.

## அலங்காரத் திருவிழா

சுழிபுரம், வியா.

வட்டுக்கோட்டை அடைக்கலம்தோட்ட கந்தசாமி கோவில் அலங்காரத் திருவிழா நேற்று ஆரம்பமாகியுள்ளது.

## செய்திச் சுருக்கம்

விஸ்வமடு குள குடியேற்றத்திட்டத்தின் காணிபெறுவதற்கு 12,000 படித்த வாலிபர்கள் விண்ணப்பித்துள்ளனர். இவர்களில் 60 சதவிகிதமானவர்கள் விவசாயப்பாடசாலையில் படித்தவர்களாவர், இக்குடியேற்றத்திட்டத்தின் கீழ் அறுநூறு பேருக்கு காணிகள் வழங்கப்படும்.

ஃ ஃ ஃ

இந்தியாவுக்கு நெல் அரிசி அனுப்புவதில் நன்கு திட்டமிடப்பட்ட மோசடி ஒன்று நடைபெறுவதாகத் தெரியவருகிறது. இந்த மோசடியில் இலங்கையரல்லாத முதலாளிகளும், சில அரசாங்க ஊழியரும் சம்மந்தப்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது.

ஃ ஃ ஃ

அரசாங்கத்தை கவிழ்க்க செய்யப்பட்ட புரட்சி சதி முயற்சி சம்பந்தமாக விசாரணை செய்வதற்காகதேவைப்படும் 'டாஸ்' சோவியத் நியூஸ் ஏஜென்ஸி ஸ்தாபனத்தின் முன்னாள் ஊழியரான அனில் கேவகே என்பவரை சி. ஐ. டி பொலிஸார் தேடிவருகின்றனர். தேடப்படும் இந்த நபரை கண்டுபிடிப்பதற்கு விசேட கோஷ்டிகள் நாட்டில் பல்வேறு பகுதிகளுக்கும் அனுப்பப்பட்டுள்ளன.

ஃ ஃ ஃ

பஸ்களின் மிதிபலகைகளில் டிக்கட் இன்றிப் பிரயாணம் செய்பவர்களைக் கண்காணிப்பதற்காக மே 2-ம் திகதி முதல் இ. போ. சபையின் திடீர் சோதனைக் கோஷ்டியில் மேலும் பலர் சேர்க்கப்படுவர் எனத்தெரியவருகிறது.

ஃ ஃ ஃ

தமிழர்கள் எந்த நாட்டில் வாழ்ந்தாலும், அந்நாட்டுக்கு விசுவாசமுடையவர்களாகவும், அந்நாட்டின் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்பட்டவர்களாகவும் தமது சொந்த கலாச்சார பண்பாட்டுப் பெருமைகளுடன் வாழவேண்டும் என்று தென்னிந்தியத் திரைப்பட நடிகரும், எம். எல். ஏ. யுமான திரு. எஸ். எஸ். ராஜேந்திரன் கூறினர்.

கொழும்பு, சுகததாசா ஸ்ரேடியத்தில் பேசுகையிலேயே மேற்கண்டவாறு சொன்னர்.

## நீர்ப்பாசன திட்டக் கூட்டம்

துணுக்காய், வியா.

வன்னேரி நீர்ப்பாசன திட்ட சிறுபோக வேளான்மை பற்றி துணுக்காய் காரியாதிகாரி திரு. எம். இராசரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

107 ஏக்கர் காணியை கமச்செய்கையின் கீழ் கொண்டுவருவதெனவும், மூன்று மாத நெல் விதைப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது.

காணி விநியோகம் திருவுளச் சீட்டு மூலம் கொடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## சமய சொற்பொழிவு

யாழ்ப்பாணம். வெள்ளி

நாயன்மார் கட்டு ஸ்ரீ இராஜஇராஜேஸ்வரி அம்பாள் ஆலயத்தில் சைவ சமய அபிவிருத்திக் கழகத்தின் ஆதரவில் நடாத்தப் பெற்றுவரும் பெரியபுராண விரிவுரைத் தொடரில் ''திருஞானசம்பந்த மூர்த்தி நாயனர்'' என்னும் பொருள் பற்றி சைவப்புலவர் சு. தம்பாபிள்ளை இன்று ஒரு சொற்பொழிவு நிகழ்த்துவார்.

ஆசிரியருக்குக் கடிதம்

## கீரிமலை சின்னத்துரை

இரண்டரை வருடங்களுக்கு முன்னர் கீரிமலைக்கேணிக்குள் விழுந்து காணமற்போன ஒரு பெறுமதியான மோதிரத்தை, கீரிமலைக் கேணிப்பாதுகாவலர் திரு. க சின்னத்துரை அண்மையில் கண்டெடுத்து, தெல்லிப்பளைக் கிராமசபைத்தலைவர் மூலம் அதை உரியவரிடம் சேர்ப்பித்தார் என்றும், மோதிரத்தைப் பெற்ற சொந்தக்காரன் இனமாகக் கொடுத்த பத்து ரூபாவை, திரு. சின்னத்துரை வாங்க மறுத்து, தெல்லிப்பளைக் கிராமசபைக்கேபணத்தைச் சேர்ப்பித்தாரென்றும், வி. என். பி. தங்கள் பத்திரிகையில் எழுதிய அதிசயச்செய்தியைப் படித்தேன்.

படித்துப் பட்டங்கள் பெற்று பணம்பறித்து, கைக்கூலி வாங்கிப் பகட்டாக வாழ்பவருக்குப் பாராட்டு விழாக்கள் எடுக்கப்படுகின்றனவே! சின்னத்துரை போன்ற நேர்மையின் சின்னங்களைப் பாராட்ட விழா ஏது? பணமே தெய்வம், கண்ணியமற்றவாழ்வே இலட்சியம் என்று வாழும் இன்றைய சமுதாயத்தில் திரு. சின்னத்துரையின் செயல் சிரியதன்றோ! அவர் சின்னத்துரையல்லர்; பெரிய துரையே.

திரு. சின்னத்துரை தனது செயலால், நேர்மையைமாத்திரம் நிலைநாட்டவில்லை. தெல்லிப்பளைக் கிராமசபையின் ஒரு கண்ணியம் நிறைந்த விசுவாசமான தொழிலாளி என்பதையும் அவர் நிரூபித்துவிட்டார். ஆகவே தெல்லிப்பளைக் கிராமசபையினர் அவருக்குத் தமதுநன்றியையும் பாராட்டையும் தெரிவிக்குமுகமாக, சம்பள உயர்வுபோன்ற தகுந்தஉபகாரத்தைச் செய்வார்களா?

க கயிலாயநாதன்
துணை அதிபர்
வட்டுக்கோட்டை
இந்துக்கல்லூரி.

**வியாபாரம் பெருக விளம்பரம் செய்க**

# வரிவிளம்பரம்

## தேவை

யாழ்ப்பாணம் கொழும்புத்துறை வி. செல்லையாவிடம் தேக்கம்பலகையினால் புதிதாகச் செய்த 21 முளம் 40 இஞ்சி அகலங்கொண்ட வள்ளம் விற்பனைக்குண்டு. விரும்புவோர் நேரில் சந்திக்கவும். நம்பர் 167, கடற்கரை வீதி. 279

தையல் வேலை தெரிந்த பெண்கள் தேவை. நேரில் மனுச்செய்க. மொடேன் ஸ்ரைல்ஸ், நிம். 3, அக்கக்கூட வீதி, யாழ்ப்பாணம். 280

வலிகாமம் வடக்குப் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்துக்குக் கணக்காளர் தேவை. விண்ணப்பிப்போர் சமாசத் தலைவருடன் தொடர்பு கொண்டு 9-5-66க்கு முன் விண்ணப்பிக்கவும். தெல்லிப்பழை. 281

## குடியேற்றவாசிகளுக்கு குடிசைகள்

கொழும்பு, வியா.

குடியேற்றத்திட்டங்களில் வசிக்கும் குடியேற்றவாசிகளுக்கு குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுக்க காணிஅபிவிருத்தி இலாகா நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக 25,000 குடிசைகள் கட்டப்படவிருக்கின்றன. இன்னும் 5 வருடங்களில் வருடத்துக்கு 5,000 குடிசைகள் வீதம் கட்டப்படவிருக்கின்றன.

குடியேற்றத்திட்ட இலாகா அதிகாரிகளுக்கும் குடியேற்றத்திட்டப் பகுதிகளில் கடமையாற்றும் ஆசிரியர்கள், வைத்தியர்கள் ஆகியோருக்கும் விடுதிகள் கட்டவும் அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது.

## வண்ணை ஸ்ரீ வைத்தீஸ்வரன் பஞ்சரத திருப்பணி நிதி



நன்கொடையை வழங்கினீர்களா வண்ணை வைத்தீஸ்வரன் பஞ்சரதத் திருப்பணிக்கு? இன்றேல் இன்றே நன்கொடை வழங்கி ஊக்குவித்தல் அடியார் கடமையாகும்.

தனதிகாரி,
தேர்த் திருப்பணிச்சபை,
தேவஸ்தான காரியாலயம்,
வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானம்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பார்லிமெண்டில் வரும் கேள்விகள்

கொழும்பு, வியாழன்

கிளிநொச்சி பாராளுமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் பார்லிமெண்டில் பின்வரும் பிரேரணைகளுக்கு முன் அறிவித்தல் கொடுத்துள்ளார்,

பிரதிநிதிகள் சபையில் சிங்கள மொழியில் நிகழ்த்தப்படுகின்ற பேச்சுக்களும் அம்மொழியில் அளிக்கப்படுகின்ற விடைகளுக்குமுரிய தமிழ், ஆங்கில மொழி பெயர்ப்புக்களையும் தமிழ் மொழியில் நிகழ்த்தப்படுகின்ற பேச்சுக்களும் அம்மொழியில் அழிக்கப்படுகின்ற விடைகளுக்குமுரிய சிங்கள, ஆங்கில மொழி பெயர்ப்புக்களையும் ஹன்சாட்டில் இடம் பெறச் செய்வதற்கு உடனடியாக நடவடிக்கைகள் எடுக்கப்படவேண்டுமென இச்சபை கருதுகிறது.

''வடக்கு கிழக்கு மாகாணங்களிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளில் இதுவரை சிங்கள ஆசிரியர்கள் நியமிக்கப்படாததற்கான காரணம் என்ன?'' என்று மூதூர் 2-வது எம். பி. அப்துல் மஜீத் பார்லிமெண்டில் கல்விமந்திரியிடம் கேள்வியொன்றைக் கேட்கவிருக்கிறார்,

அவர் கேட்கவிருக்கும் மற்றும் சில கேள்விகள் வருமாறு:-

முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும், பெற்றோர் ஆசிரியர் சங்கங்களும் பல முறை வேண் கோள்கள் விடுத்திருந்தும்கூட, கிழக்கு மாகாணங்களிலுள்ள முஸ்லிம் பாடசாலைகளுக்கு சிங்கள ஆசிரியர்கள் எவரேனும் இற்றைவரை நியமிக்கப்படவில்லையென்பதை அவர் அறிவாரா?

அவர்களை நியமிப்பதற்கு அவர் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்வாரா? அன்றேல் ஏன்?


REGAL--JAFFNA
NOW SHOWING!

James Robertson Justice
in
**Mystery Submarine**
( Naval War Film )

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
எம். ஜி. ஆர். - பத்மினி
நடித்த
**ராணி சம்யுக்தா**

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
2-30, 6-30, 9-45க்கு மட்டும்
எம். ஜி. ஆர். - அஞ்சலிதேவி
நடித்த
**சர்வாதிகாரி**
கலரி 50 சதம்.


## புங்குடுதீவு கண்ணகி அம்பாள் ஆலய உற்சவம்

ஊர்காவற்றுறை, வியா

புங்குடுதீவு ஸ்ரீ ராஜராஜேஸ்வரி அம்பாள் ஆலயம் என அழைக்கப்படும் கண்ணகி அம்பாள் ஆலய வருடாந்தஉற்சவம் சென்ற திங்கட்கிழமை ஆரம்பமாகியது. சித்திராபூரணை அன்று தேர்த்திருவிழா நடைபெறும்.


கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) நவா (கொம்பனித்தெரு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30.
போயா நாட்களில் 4 காட்சிகள்.
விஜயா (மட்டக்களப்பு) ஸ்ரீகிருஷ்ணு (திருகோணமலை) மொடேர்ன் (பதுளை)
மொடேர்ன் (பண்டாரவளை) விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா)



**சிவாஜி கணேசன் - சாவித்திரி**
(9 மாறுபட்ட வேடங்களில்)
நாகேஷ் —— மனோரமா
மற்றும் பலர் நடித்திருக்கும்
**நவராத்திரி**


இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலவீதி, 63-ம் இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 29-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

கிரிக்கெட்

## இலங்கைவங்கி வெற்றி

### ஆர். பி. நடராசா கூடுதல் ஓட்டம் எடுத்தார்

யாழ்ப்பாணம், வெள்ளி

இலங்கை வங்கிகள் கோஷ்டிக்கும் மார்க்கண்டைல் வங்கி கோஷ்டிக்குமிடையே நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறற வருடாந்த மென்பந்து கிரிக்கெட் போட்டியில் இலங்கை வங்கி கோஷ்டி ஒரு இன்னிங்ஸாலும் முப்பத்தியிரண்டு ஓட்டங்களினாலும் சுலபமாகவெற்றியீட்டியது.

முதலில் துடுப்பெடுத்தடிய இலங்கைவங்கி கோஷ்டி தனது முதல் இன்னிங்ஸில் சகல விக்கட்டுகளையும் இழந்து மொத்தம் 83 ஓட்டங்கள் எடுத்தது. இதில் வங்கி மனேஜர் ஆர் பி நடராஜா 17 ஓட்டங்களையும், ஏ. சி. டி. ராசையா 14 ஓட்டங்களையும், எஸ். மகாலிங்கம் 11 ஓட்டங்களையும், ஏ. ஜோன் 10 ஓட்டங்களையும், கூடுதலாக விளாசித்தள்ளியிருந்தனர் மார்க்கண்டைல் வங்கியைச் சேர்ந்த எஸ். பத்மநாதன் 22 ஓட்டங்களுக்கு 6 விக்கட்டுகளையும். ஆர். டி. கிறீன் 29 ஓட்டங்களுக்கு 2 விக்கட்டுகளையும் கைப்பற்றினார்கள்

இதனைத்தொடர்ந்து மார்க்கண்டைல் விளையாடியது. முதல் இன்னிங்ஸில் இக்கோஷ்டி மொத்தம் 26 ஓட்டங்களைஎடுத்தது. வி. கதிர்காமதாசன் 13 ஓட்டங்கள் கூடுதலாக எடுத்திருந்தார். இதில் இலங்கை வங்கி ஏ. சி. டி. ராசையா எட்டுவிக்கட்டுகளையும், கே. வேதாசலம் 2 விக்கட்டுகளையும் கைப்பற்றியிருந்தனர். மார்க்கண்டையில் இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்து விளையாடியபொழுது மொத்தம் 25 ஓட்டங்கள் எடுத்தது. எஸ். வாமதேவன் 14 ஓட்டங்கள் கூடுதலாக எடுத்திருந்தார். இல்ஙகை வங்கி கே. வேதாசலம் 5 விக்கட்டுகளையும், ஏ. சி. டி. ராசையா 4விக்கட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர். இக்கிரிக்கெட் போட்டியில் இலங்கை வங்கியைச் சேர்ந்த திரு. ஆர். பி. நடராசாவே கூடுதல் ஓட்டங்கள் எடுத்தார்.

## ஐயாறன்

(2-ம் பக்கத்தொடர்ச்சி)

சட்டசபைஉறுப்பினர். நாமக்கல்லில் அவரை காந்தி ராஜகோபால் பார்த்து, அவருடன் சென்னைக்குச்சென்று சில நாள் தங்கியிருந்தார். பின்னர் வேதாரண்யம் வந்து, சர்தார் வேதரத்னம் அமைத்த, ''கஸ்தூரிபாய் கன்யா குருகுலம்''சென்று, அங்கு பயிற்சிபெறும் 600 பெண்மணிகள் கூட்டத்தில் பேசினாராம். அவர் இங்கு பால் விநியோக அதிகாரியாக இருந்து சென்ற வருடம் ஓய்வுபெற்றுள்ளார். அவர் வாழ்க!

ஃ ஃ ஃ

ஏதும் ஒன்றும் அறிவிலராயினும்,
ஓதி அஞ்செழுத்தும்முணர்வார்கட்குப்
பேதமின்றி அவரவர் உள்ளத்தே
தாமும் மகிழ்வர் மாற்பேரறே.

—அப்பர் சுவாமிகள்

## புத்தளத்தில் புயல்

புத்தளம், வியாழன்

புத்தளம் நகரப்புறத்தில் சென்ற செவ்வாய்க் கிழமை வீசிய சூறாவளி காரணமாக பலத்த சேத மேற்பட்டுள்ளது.

[illegible]

# 'மக்களுக்கு சேவை புரிய பட்டதாரிகள் முன்வருக'

## ஜே. பி. பாராட்டு விழாவில் மந்திரி அழைப்பு

யாழ்ப்பாணம், சனி

''சமாதான நீதவான் பதவி பெற்றுள்ள திரு. வடிவேல் படித்துபட்டம்பெற்றவர். ஆனால் பெரும் பதவிகள்பற்றி அக்கறை கொள்ளாமல் மக்களுக்கு சேவை புரிவதையே அவர் பெருநோக்கமாகக்கொண்டு பணி புரிந்துவந்துள்ளார். அதன் காரணமாகவே இந்தப் பதவி அவருக்கு கிடைத்திருக்கின்றது. இப்படியே இதர பட்டதாரிகளும் மக்கள்சேவையைக் கைக்கொள்வார்களானல் நாட்டுக்குப் பெரும் பயன் ஏற்படும்'' என்று ஸ்தலஸ்தாபன மந்திரி செனட்டர் திருச்செல்வம் கூறினர்.

சுருட்டு உற்பத்தியாளர் சங்கச் செயலாளரும் அரசாங்க சம்பள நிர்ணய சபை அங்கத்தவருமான திரு. சி. ஆ. த. வடிவேலுவுக்கு சமாதானநீதவான் பட்டம் வழங்கப்பட்டுள்ளதையொட்டி நடைபெற்ற வைபவம் ஒன்றில் செனட்டர் திருச்செல்வம் உரை நிகழ்த்துகையிலேயே மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

கூட்டத்துக்கு நல்லூர் எம். பி. டாக்டர் ஈ. எம். வி. நாகநாதன் தலைமை வகித்தார். அவர் பேசுகையில், சமாதான நீதவான் உதவி கௌரவப்பதவியல்ல. மக்களுக்கு சேவை செய்யும் பொருட்டு அரசாங்கத்தால் வழங்கப்படும் பதவியாகும் என்றார்.

உடுவில் எம். பி. திரு. தர்மலிங்கம், கிராமச்சங்கத் தலைவர் திரு. முத்துலிங்கம், திரு. மு. முருகரட்ணம் ஆகியோர் உட்பட வேறு பலரும் பேசினர்கள்,

ந. நி.

# வலிவடக்கு பகுதியில் 8 நெசவு நிலையங்கள்

## கட்டட வேலைகள் ஆரம்பம்

மாவிட்டபுரம், வியாழன்

உள்நாட்டு அமைச்சரின் புதிய திட்டப்படி வலி-வடக்கு காரியாதிகாரியின் பிரிவில், எட்டு நெசவுநிலையங்கள் நிறுவுவதற்கான வேலைகள் இப்பொழுது நடைபெற்றுவருகின்றன. அளவெட்டி, குரும்பசிட்டி, ஊராங்குனை, கந்தரோடை, இணுவில், ஏழாலை, சங்குவேலி, திடல்புலம் ஆகிய கிராமங்களில் இப்புதிய நெசவுநிலையங்கள் அமைக்கப்படவிருக்கின்றன.

இக்கட்டிடங்கள் தீவிரமாக அமைக்கப்படுவதற்கு சிமெந்து நெருக்கடி தடையாக இருப்பது குறித்து வலிவடக்கு காரியாதிகாரி திரு. ரி. முருகேசம்பிள்ளை சிமெந்து தொழிற்சாலை அதிபருடன் தொடர்பு கொண்டு போதியளவு சிமெந்து கிடைக்கச் செய்யும்படி கோரியுள்ளார். அரசாங்கத் திட்டப்படி இவ் நெசவுநிலையங்கள் வருகிற செப்டம்பர் மாதம் 30-ந் திகதிக்கிடையில் முடிவடையவேண்டும் எனச் சொல்லப்படுகிறது.

அரசாங்கம் இந்த ஒவ்வொரு நெசவுநிலையத்திற்கும் தலா ஆறுயிரம் ரூபாய் நன்கொடை வழங்கியுள்ளது. ஏனைய செலவுகளை சிரமதான திட்டப்படி அவ்வப்பகுதி கிராமமுன்னேற்றச்சங்கங்கள் பொறுப்பேற்கும். இந்த எட்டு நெசவு நிலையங்களும் பூர்த்தியானவுடன் வேலையில்லாமல் இருக்கும் 200 பேருக்கு வேலைவாய்ப்புக் கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## பசளை பண்டகசாலைகள்

கொழும்பு, வெள்ளி

விவசாயிகளுக்கு பயிர்ச்செய்கைக்கு மேலும் உதவிகளை விஸ்தரிக்கும் பொருட்டு மாவட்டங்கள் தோறும் 32 பசளை பண்டகசாலைகளை நிறுவுவதற்கு பசளைக் கூட்டுத்தாபனம் முடிவுசெய்திருக்கின்றது. இத்திட்டத்தை அடுத்த நான்கு வருடத்துக்குள் நிறைவேற்றவேண்டும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## தற்கொலைகள்

ஊர்காவற்றுறை, வியா

சரவணைக் கிராமத்தை சேர்ந்த தம்பாபிள்ளை மனைவியான நல்லம்மா (வயது 45) நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். மகாலிங்கம் விசாரணை நடாத்தினர். விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்மானிக்கப்பட்டது. தற்கொலையுண்டவர் ஆறு பிள்ளைகளுக்குத் தாயார் என அறியப்படுகிறது.

ஃ ஃ ஃ

வேலணை மேற்கு வாசியான பி. கனகரத்தினம் அல்லது கனகு என்பவர் நச்சுத்திராவகம் அருந்தித் தற்கொலை செய்து கொண்டார்.

ஏழு பிள்ளைகளுக்குத் தந்தையான இவரது மரண விசாரணை ஸ்தலத்தில்நடைபெற்றது.

விசாரணையின்பின் தற்கொலை எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

வாஷிங்டன், ஏப். 28

அடுத்த சில வாரங்களுக்குள் சீன தனது 3-வது அணுகுண்டை வெடிக்கும் என அமெரிக்க உளவிலாகா கூறுகிறது.

## நன்றி நவிலல்

சேர் வைத்திலிங்கம் துரைச்சாமி அவர்களின் ஈமக்கிரியைகளில் பங்கு பற்றியவர்களுக்கும் அனுதாபச் செய்திகள் அனுப்பியவர்களுக்கும் மற்றும்பல விதத்தில் உதவி புரிந்தவர்களுக்கும் லேடி துரைச்சாமியும் அவரது குடும்பத்தைச் சேர்ந்தவர்களும் தமது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறார்கள்.

மகேந்திரா,
யாழ்ப்பாணம்,

175

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org